**செய்தி வெளியீடு:20** **10–1–2009**

## தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளை முன்னிட்டு 7 ஆயிரத்து 269 ஆவின் நிறுவன ஊழியர்களுக்கு 72 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை, முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்து ஆண்டு காலமும் வழங்கப்படாமல் தடைபட்டிருந்தது.

2006இல் இந்த அரசு அமைந்தபின் பொங்கல் திருநாளையொட்டி ஆவின் நிறுவனப் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையை மீண்டும் வழங்குவது என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முடிவு செய்ததைத் தொடர்ந்து, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆவின் நிறுவனப் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளாகவும் கொண்டாடப்படும் இந்த ஆண்டின் பொங்கல் திருநாளையொட்டி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களில் 2008 ஆம் ஆண்டில்,

90 நாட்கள் வரை பணியாற்றியவர்களுக்கு 145 ரூபாய்;

91 முதல் 150 நாட்கள் வரை பணிபுரிந்தவர்களுக்கு 240 ரூபாய் ;

151 முதல் 200 நாட்கள் வரை பணிபுரிந்தவர்களுக்கு 400 ரூபாய்;

200 நாட்களுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு 1000 ரூபாய் என உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி ஆவின் நிறுவனங்களில் பணிபுரியும் 7 ஆயிரத்து 269 பணியாளர்களுக்கு மொத்தம் 72 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

***

ISSUED BY : DIPR ,CHENNAI.